# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2370/10 - 2024 පෙබරවාරි මස 06 වැනි අඟහරුවාදා - 2024.02.06

2370/10 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPP/LAND/LA/ACQUI/10/8/1.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2020/WS/239.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் பொல்பிதிகம பிரதேச செயலாளர் பிரிவில் இல. 354 - பொல்பிதிகம கிராம அலுவலர் பிரிவில் கலபிடகம கிராமத்தில் கடத்திரல் வரைபடம் 421484, வலய இல. 01, தாள் இல. 2 இல் 2023.12.01 ஆந் திகதிக்கு உரிய கீழ்க் காணப்படும் காணித்துண்டுகளின் விபரங்கள் :

**01. துண்டு இல. 1**

காணியின் பெயர் : தன்கஹமுலவத்த, நுககஹ முலகல, நுககஹமுலஹேன; விபரம் : கெவத்த, நிலையான இரண்டு கட்டிடங்களின் பகுதிகள் உண்டு; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : நுவர மஹ தேவாலயம்; விஸ்தீரணம் : 0.0081 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 2**

காணியின் பெயர் : பம்பரகலபாவுலஹேன்யாய, கலபிடகமஹேன, கலபிடகமவெவ மற்றும் பன்சல்வத்த; விபரம் : கெவத்த, நிலையான கட்டிடம், நிலையான இரண்டு கட்டிடங்களின் பகுதிகள் மற்றும் நீர்க் கோபுரம் உண்டு; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : நாகொல்ல புராதன ரஜ மஹா விஹாரை; விஸ்தீரணம் : 0.0924 ஹெக்டயார்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பொல்பிதிகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி.எம்.எஸ். தசநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்பிதிகம.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பொல்பிதிகம,
2024, சனவரி 31.

EOG 02 - 0038